# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை)

DDCC BANK

10/H,நேதாஜி பைபாஸ் ரோடு, தருமபுரி.

தொலைபேசி எண். 04342-260051 மின்னஞ்சல். contact@ddccbank.com

ddccb.10100@gmail.com

சுற்றறிக்கை எண்.060/2021 நாள் : 01.10.2021

ந.க. எண். 19678/91 (வளர்ச்சி)

## சுற்றறிக்கை

பொருள் : தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை) - இட்டுவைப்புகளுக்கான வட்டி விகிதம் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் வழங்கப்படும் நகைக் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டது - நடைமுறைபடுத்தத் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை : கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண். 61119/2020 மவகொ1, நாள். 30.09.2021.

**********

பார்வையில் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை அவர்களின் கடிதத்தில் வங்கியின் கிளைகள் மூலம் பெறப்படும் இட்டுவைப்புகளுக்கான வட்டி விகிதம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் வழங்கப்படும் நகைக் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டு தொடர்புறுத்தப்பட்டுள்ளது. எனவே, கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்ட வட்டி விகிதங்களை 04.10.2021 முதல் நடைமுறைபடுத்த அறிவுறுத்தப்படுகிறது.

| வ. எண் | இட்டுவைப்புக் காலம் | 16.10.2020முதல் வழங்கப்பட்ட வட்டி விகிதம் (ஆண்டு ஒன்றுக்கு) | | 04.10.2021முதல் மாற்றியமைக்கப்படும் வட்டி விகிதம் (ஆண்டு ஒன்றுக்கு) | |
|---|---|---|---|---|---|
| | | சாதரண இட்டுவைப்பு களுக்கு | மூத்த குடிமக்களின் இட்டுவைப்புக ளுக்கு | சாதரண இட்டுவைப்பு களுக்கு | மூத்த குடிமக்களின் இட்டுவைப்புக ளுக்கு |
| 1 | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 4.00% | 4.00% | 4.00 | 4.00 |
| 2 | 15 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை | 4.25% | 4.25% | 4.50 | 4.50 |
| 3 | 31 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.25% | 4.25% | 4.50 | 4.50 |
| 4 | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% | 5.00 | 5.00 |
| 5 | 91 நாட்கள் முதல் 120 நாட்கள் வரை | 5.00% | 5.00% | 5.25 | 5.25 |
| 6 | 121 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% | 5.50 | 5.50 |
| 7 | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 5.75% | 6.00% | 6.25 | 6.75 |
| 8 | 365 நாட்கள் / 12 மாதங்கள் | 6.00% | 6.50% | 6.50 | 7.00 |
| 9 | 1 வருடத்திற்கு மேல் 2 வருடம் வரை | 6.25% | 6.75% | 6.75 | 7.25 |
| 10 | 24 மாதங்களுக்கு மட்டும் (சிறப்பு இட்டுவைப்பு) | - | - | 7.00 | 7.50 |
| 11 | 2 வருடத்திற்கு மேல் 3 வருடம் வரை | 6.00% | 6.50% | 6.80 | 7.30 |
| 12 | 3 வருடத்திற்குமேல் | 6.00% | 6.50% | 6.75 | 7.25 |
| 13 | 444 நாட்கள் மட்டும் | 6.25% | 6.75% | 6.90 | 7.40 |

i) இவ்வங்கியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் இட்டுவைப்புகளுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 1.00% மட்டும் கூடுதல் வட்டி விகிதம் வழங்கலாம்.

ii) ஓய்வு பெற்ற வங்கிப் பணியாளர்களின் வைப்புகளுக்கு **0.25%** கூடுதல் வட்டி விகிதம் வழங்கலாம்.

iii) ஓய்வு பெற்ற வங்கிப் பணியாளர், 60 வயதுக்கு மேற்பட்டு இருப்பின் சாதாரண வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதத்துடன், மூத்த குடிமக்களுக்கான கூடுதல் வட்டி விகிதம் **0.50% +** ஓய்வு பெற்ற வங்கிப் பணியாளர்களுக்கான கூடுதல் வட்டி விகிதம் **0.25%** ஆகியவற்றை சேர்த்து வழங்க வேண்டும்.

iv) 24 மாதங்களுக்கான சிறப்பு இட்டுவைப்பு புதியதாக இட்டுவைப்புகள் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மட்டும் பொருந்தும்.

## தங்க நகைக் கடனுக்கான வட்டி விகிதம்

நமது வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளின் மூலம் வழங்கப்படும் நேரடி தங்க நகைக் கடன்களுக்கான வட்டி விகிதம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| 07.12.2020 முதல் நடைமுறையில் உள்ள வட்டி விகிதம் | 04.10.2021 முதல் மாற்றியமைக்கப்பட்ட வட்டி விகிதம் (Maximum) |
|---|---|
| ரூ.2.00 இலட்சம் வரை வழங்கும் கடன்களுக்கு 8.99% (P.A) | **ரூ.2.00 இலட்சம் வரை வழங்கும் கடன்களுக்கு 11.40% (P.A)** |
| ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.20.00 இலட்சம் வரை வழங்கும் கடன்களுக்கு 9.99% (P.A) | **ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.20.00 இலட்சம் வரை வழங்கும் கடன்களுக்கு 11.99% (P.A)** |

மேலும், நமது வங்கியின் கிளைகள் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு வழங்கும், தங்க நகைக் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது.

## JEWEL LOAN (PACCS, PCARDBs & CMS)

| Name of the Loan | Details | DCCB to PACCS | PACCS to Members |
|---|---|---|---|
| Jewel Loan (PACCS, PCARDBs & CMS) | Existing | 8.75% (Monthly Compounding) | 10.50% (Maximum) |
| | **Revised** | **10.49% (Monthly Compounding)** | **11.99% (Maximum)** |

மேற்கண்டவாறு மாறுதல் செய்யப்பட்டுள்ள வட்டி விகிதங்களை, 04.10.2021 முதல் மாற்றி அமைத்து நடைமுறைப்படுத்திட அனைத்து கிளை மேலாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கையில் கண்டுள்ளவாறு மாறுதல் செய்யப்பட்டுள்ள இட்டுவைப்புகளுக்கான வட்டி விகிதங்களை, CBS மென்பொருளில் மாற்றம் செய்யத் தேவையான தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள கணினிப்பிரிவு மேலாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களைப் பொறுத்த அளவில் சங்கங்கள் தங்களது நிதிநிலையைக் கருத்தில் கொண்டு இந்த சுற்றறிக்கையில் கண்டுள்ள வட்டி விகிதங்களுக்கு மிகாமல் இட்டுவைப்புகளுக்கான தங்களது வட்டி விகிதங்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

இந்த சுற்றறிக்கையினைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் கடிதத்தினை மறுதபாலில் அனுப்பி வைக்க தொடர்புடைய அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-சு.இராமதாஸ்

**இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்.**

பெறுநர் :-

1. அனைத்து கிளை மேலாளர்கள்.
2. அனைத்து தலைமையக உதவி பொதுமேலாளர்கள் மற்றும் பிரிவு மேலாளர்கள்.
3. தலைமையக, கணினி பிரிவு மேலாளர்.
4. அனைத்து தொ.வே.கூ.கடன் சங்கங்கள், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

நகல் :-

1. துணைப்பதிவாளர், தருமபுரி / கிருஷ்ணகிரி / ஓசூர்.
2. இணைப்பதிவாளர், தருமபுரி / கிருஷ்ணகிரி.
3. தலைவர்,இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், முதன்மைவருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் ஆகியோர்களின் மேசைக்கு.
4. கூட்டுறவு தணிக்கை துணை இயக்குநர், மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:-

1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை
2. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை.

1/10/21

/உண்மை நகல்/

உதவி பொதுமேலாளர் (வளர்ச்சி)